
# கல்விக்கதிர்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினது
உத்தியோகபூர்வ செய்தி மடல்

2018 ஜனவரி


இதழ் - 1

மலர் - 4




மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

# நிகழ்வுகளின் பதிவுகள்



# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**தொலைநோக்கு**

*'வட மாகாணத்தின் அனைத்து சிறார்களுக்கும் எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ளக் கூடிய தான உன்னதமான கல்வி.*

**பணிக்கூற்று**

*"தரமான வாழ்க்கைப்பாங்குடன் வாழ்வதற் கான அறிவுமிக்க ஆளுமையுடைய சமுதாயம் உருவாக வழிப்படுத்தல்"*

# கல்விக்கதிர்

மலர் 4 இதழ் 1 ஜனவரி 2018

**மேற்பார்வையும் வழிகாட்டலும்**
**செ.உதயகுமார்**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்

**ஆலோசனைக்குழு**
**திரு.கே.பிரேமகாந்தன்**
மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்

**திரு. Y. இரவீந்திரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு.ஜெனாட் பிரெட்லி**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.கே.சத்தியபாலன்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.க.மணிமாரியன்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்

**இதழாசிரியர்**
**திரு.சு.சற்குணராஜா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**தொடர்புகளுக்கு :-**
தொலைபேசி - 021 224 2807
தொலைநகல் - 021 224 1383
மின்அஞ்சல் - kalvikathirnorth@gmail.com
குறுந்தகவல் - 0094 703 555 666
முகநூல் - Provincial Department of Education Northern Province





# தடைகளைத் தாண்டி முன்னேறுவோம்...

2018ம் வருடத்திற்குரிய முதலாவது இதழில் உங்களுடன் உறவாடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி. 2017ம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மாகாணக் கல்வித் திணைக்களத் தின் சாதனையாளர் கல்விக் கௌரவிப்பு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றுள்ளது. 300 புதிய ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சி வட்டுக்கோட்டை தொழிநுட்பக் கல்லூரியில் 21 நாட்களாக நடைபெற்றது. 2017 ஆகஸ்ட் புலமைப்பரிசில் பரீட்சை நடை பெற்று முடிவுகள் வந்துள்ளன. பரீட்சை முடிவு களின்படி வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் எமது மாகாணம் இரண்டாம் இடத்தில் உள்ளது. வலயங்களின் அடிப்படையில் யாழ் வலயம் தேசிய ரீதியில் முதலிடத்தில் உள் ளது. உயர்தர பரீட்சை நடைபெற்று தற்போது பெறுபேறுகள் வந்துவிட்டன. அதிலும் நாம் முதலாவது இடம்பெற்றுள்ளோம். கணிதப் பிரிவில் எமது மாகாண மாணவனே தேசிய ரீதியில் முதலிடம். அதேபோல் கணிதப் பிரிவில் எமது மாகாணம் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இவை எமது மாகாணத்தின் சாதனைகள் எனக் கொள்ள லாம். இச்சாதனை படைக்க உதவிய கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள், வலயக் கல்வி காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள். மற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கு எமது பாராட் டுக்கள். இச்சாதனைகளை வருடா வருடம் தொடர்வதற்கு எல்லோரின் பங்களிப்பினை யும் வேண்டி மாகாணத்தின் முன்னேற்றத்திற் கான பயணத்தில் இணையுமாறு அழைக்கின் றோம்.

நன்றி

**இதழாசிரியர்**



# ஆசிரியர்களின் நவீன வகிபங்குப் பரிமாணமாக "உளவளத்துணையாளர்"

**கலாநிதி பா. தனபாலன்**
(உபபீடாதிபதி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

சம கால மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுக்கும் மிக முக்கிய நிறுவனமாக இன்று பாடசாலை உள்ளது. பாடசாலையின் உயிர்த்துடிப்பாளர்கள் ஆசிரியர்களே ஆவர். சமூகத்திற்கும் இவர்கள் வகை கூற வேண்டியவர்களாகவுள்ளனர்.

**"ஆசிரியர்கள் தான் உலகின் முதன்மை அங்கத்தவர்கள். ஏனெனில் அவர்கள் பணி பூமியின் விதியைத் தீர்மானிக்கும்."**


– ஹலன் கல்டிகொற் –

இவ்வாறு உலகிலேயே உயர்வாண்மையாக உள்ள ஆசிரியர்த்தொழில் வகிபாகங்கள் பலவாகவுள்ளன. கற்பிப்பவர், வழிகாட்டி, நண்பர், தலைவர், உதவுபவர், முன்மாதிரியாளர், சமூகத் தலைவர், கலைஞர் என இன்னும் பலவாகவுள்ளன. இவற்றுடன் இன்று உளவளத் துணையாளர் என்ற மிக முக்கிய பாத்திரத்தை உடனடியாகப் பெற வேண்டிய நிலையில் ஆசிரியர்கள் உள்ளார்கள். ஆசிரியர்கள் அனைவருமே உளவளத் துணையாளர் வகிபாகத்தை ஏற்று இன்றைய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பொருத்தமான ஆலோசனைகளைப் பொறுப்புடன் வழங்க வேண்டியுள்ளது.

யுத்த விளைவுகள், வறுமை, சமூகச் சீர்கேடுகள், சமூக வன்முறைகள், கலாச்சாரச் சீர்கேடுகள், குடும்பப் பிரச்சினைகள், சமவயதுக் குழுப்பிரச்சினைகள், கட்டிளமைப் பருவ பாலியல் சார் குழப்பங்கள் எனப் பலவிதமான நெருக்கீடுகளால் பாதிக்கப்பட்டு உளச் சக்தி தீய்ந்து போயிருக்கின்ற மாணவர்களைத் தயார்நிலைக்கு அழைத்துவர வேண்டிய பொறுப்பு இன்று ஆசிரியர்கள் மீது அவர்களை அறியாமலே சுமத்தப்பட்டுள்ளது. அதைப் புரிந்து தமது கற்பித்தல் கடமைகளுடன் உளவளத்துணையாளராக இருந்து வழிகாட்டப் பல்வேறு திறன்களை இன்றைய ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டும்.



## உளவளத்துணை



ஒருவர் தனது உள வளங்களின் முழுமையான விருத்தியை நோக்கிச் செல்கின்ற பயணத்தில் அவர் தான் சந்திக்கின்ற தடைகளை வெற்றி கொள்ள அவருக்கு அளிக்கும் ஒரு உயிர்ப்பான தொடர் செயற்பாட்டு உதவியே உளவளத்துணையாகும். இன்றைய பாடசாலை மாணவர்கள் பல நெருக்கடிகள் மத்தியில் தமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது தவிக்கின்றார்கள். தற்கொலை செய்து கொள்கின்றார்கள். தகாத உறவுகளை மேற்கொள்கின்றார்கள், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுகின்றார்கள். ஆசிரியரையோ, அதிபரையோ, பெற்றோரையோ, பெரியோரையோ மதிக்காமல் செயலாற்றுகின்றார்கள் எனக் குற்றம் சுமத்தப்படுகிறது. இதற்கு மேற்குறிப்பிட்டவர்களே முன் மாதிரியாகவுமுள்ளார்கள். இவற்றிலிருந்து மாணவர்களை மீட்க இன்று ஒவ்வொரு ஆசிரியரும் உளவளத்துணையாளர் வகிபங்கைப் பிரயோகிக்க வேண்டும்.

உளவளத் துணையில் உறவு அல்லது தொடர்பு என்பது முக்கியமானது. பிரச்சினைகளோடு வரும் மாணவரை "அவரை அவராக ஏற்று மதித்து கசப்பான அனுபவங்களைப் பகிர" ஒத்த உணர்வு ஆசிரியருக்குத் தேவை. மாணவரின் ஏக்கங்கள், தேவைகள், ஆசைகள் என்பவற்றை அறிந்து - உணர்ந்து, அவரது பிரச்சினையின் உண்மை நிலையை அவரையே அறியச் செய்து அவரையே தீர்வுகாண உதவும் சேவையாக உளவளத்துணைச் சேவை அமைகின்றது.

உதவி நாடி வரும் மாணவர்களின் உளப்பிரச்சினைகளைத் தீர்ப்பதோடு உளவளத் துணைச் சேவை நின்று விடுவதில்லை. அதற்கு அப்பால் தேவை ஏற்படுகின்றபோது மாணவரின் நடத்தையில் நேரான மாற்றத்தை ஏற்படுத்தல் புதியதான நேரான அகக் காட்சிகளைக் காணச் செய்தல், குடும்பம், பாடசாலை சமூகப் புறச் சூழல் மாணவரில் பாதகமான முறையில் தொழிற்படுகின்ற போது அவற்றினைச் சாதகமான முறையில் மாற்றியமைத்தல், குடும்ப மாக வைத்து குடும்ப உளவளத்துணையை வழங்குதல், ஒத்த பிரச்சினையுள்ள துணைநாடி மாணவர்களைச் சேர்த்து குழுவாக உளவளத் துணைச் சேவை செய்தல் என்பவையும் முன்னுரிமை பெறுகின்றன.

## உளவளத்துணை ஆசிரிய வகிபங்குப் பண்புகள்

ஆசிரியர்கள் உளவளத்துணையாளராக செயலாற்ற முன்வரும்போது அவற்றிற்கான உரிய பயில்வுகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் "ஆசிரியர்கள் வாண்மைசாரா உளவளத்துணையாளர்" என்ற வகையில் மாணவர்களை அன்புடன் அணுகி பாதுகாப்பை வழங்கி, அவர்கள் எவ்வாறான சூழ்நிலைகளில் இருந்து வருகின்றார்கள் எத்தகைய உளப்பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர், அவற்றிற்குரிய காரணங்கள் எவை? அவற்றை இனம் காண்பது எவ்வாறு? தீர்வுகளை எவ்வாறு பெறலாம்? எவ்வாறான உதவிகளை வழங்கலாம் ஆகிய விடயங்களுக்குத் தீர்வுகளைப் பெற பின்வரும் வகிபங்குகளை ஆசிரியர்கள் பெற வேண்டும்.

* சிறந்த செவிமடுப்பாளர் (As a Active Listener)
* நண்பர் (as a Friend)
* வசதியளிப்பவர் (as a Facilitator)
* வழிகாட்டுபவர் ( as a mediator)
* சிகிச்சையளிப்பவர் ( as a Premeditator)
* தலைமைத்துவம் வழங்குபவர் (as a Leader)
* தகவல் வழங்குபவர் (as a Information Provider)
* பிரதிநிதி (as a Representative or Agent)
* கட்டுப்பாட்டாளர் (As a Controller)
* முற்பாதுகாப்புடன் செயற்படுபவர் (As a Preventer)
* சமூக நிர்மானி (Social Builder)

இவ்வாறு பரந்த ஆசிரியத்துவத்துக்கே உரித்தான வகிபங்குகளை உளவளத் துணையாசிரியர் கொண்டிருப்பதுடன் இரகசியம் காப்பவராக, நேர்மையானவராக, மனிதத்துவம் பொதிந்த முதல்தர நல்மனிதராக, நம்பிக்கைக்குரியவராகச் செயலாற்ற வேண்டும். எனவே உளவளத்துணை என்பது தகவல் கொடுப்பதல்ல, புத்திமதி கூறுவதல்ல. துணைநாடி வருபவரை மதிப்பீடு செய்தவல்ல, நம்பிக்கைகளை மாற்றுவதல்ல, எச்சரிக்கை - பயமுறுத்தல் விடுவதல்ல, தன் உளச்சக்தி மூலம் துணை நாடியினுடைய உளச்சக்தியைப் பொருத்தமாக அசைப்பதன் மூலம் துணைநாடி தனது சக்திகளை இனங்கண்டு அவற்றைப் பயன்படுத்தி தன் பிரச்சினைகளைத் தீர்க்க துணை புரிதலே உளவளத் துணை ஆசிரியரின் முக்கிய பணியாகும். நாடிவரும் மாணவர்களின் உளச்சக்தி அசையச் செய்வதற்கு,

- உடனிருத்தல்
- உற்றுக்கேட்டல்
- ஒத்துணர்வு
- துருவி ஆராய்தல்
- குவியப்படுத்தல்
- எதிர்கொள்ளல்
- பார்வை மாற்றம் செய்தல்.
- இலக்கு நிர்ணயம் செய்தல்.

ஆகிய நுண்திறன்களை மேற்கொள்ள வேண்டும். பிரயோக ரீதியில் இத்திறன்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒழுங்கு முறையில் வரவேண்டும் என்பதல்ல. உளவளத் துணையாசிரியர் உன்னத ஆளுமைப் பண்புடையவர்களாகக் காணப்பட வேண்டும்.

## உன்னத ஆளுமைப் பண்புகள்

ஒருவரது ஆற்றல்கள். நம்பிக்கைகள், தனித்தன்மைகள், மனப்பாங்குகள், சமூக ஒற்றுமைத் தன்மைகள், கொள்கைகள், பழக்கவழக்கங்கள், உணர்ச்சித்தூண்டல் பேறுகள் ஆகிய வற்றுடன் அவற்றிடம் காணப்படும் சக்தி மட்டங்கள், எண்ணங்கள், கனவுகள் ஆகிய அனைத்தையும் அவரது ஆளுமை உள்ளடக்கியிருக்கும். எல்லா மனிதர்களுமே தமக்கெனப் பிரத்தியேகமான ஆளுமைக்கூறுகளைக் கொண்டிருக்கின்றார்கள். எனினும் தமது ஆற்றல்களை முழுமையாகத் தொழிற்படுத்துகின்ற நிலையில் மனிதர்கள் இருப்பது குறைவு. ஆனால் உன்னத ஆளுமையுடையோர் நேர்நிலையில் முழுமையாகத் தொழிற்படுகின்ற ஆளுமை உள்ள மனிதர்களாக இருப்பர்.

இவர்கள் மிகக் குறைந்தளவிலேயே தீர்ப்பிடுவர். அல்லது தீர்ப்பிடாமலே விடயங்களை நோக்குவர். இவர்கள் விடயங்களில் இருந்து மனிதர்களைப் பிரித்துப் பார்க்கக் கூடியவர்களாகவே இருப்பர். தம்மிலுள்ள குறைநிறைகளை முழுமையாக விளங்கிக் கொள்வதுடன் அவற்றை ஒரே தளத்தில் நின்று மனம் திறந்து பேசக் கூடியவர்களாக இருப்பர். தமது சுயத்தில் நின்று மனந்திறந்து பேசக் கூடியவர்களாக இருப்பர். தமது சுயத்தின் இருண்ட பக்கங்களை அல்லது தமது ஆலோசனை நாடியின் இருண்ட பக்கங்களைப் பார்க்கக் கூடிய ஆற்றல் உடையவர்களாக இருப்பர். உன்னத ஆளுமையாளர்களின் ஆளுமைக் கூறுகளில் முரண்பாடோ அல்லது பிளவோ இருப்பதில்லை. இவர்கள் தமது மறை எண்ணங்களை மற்றவர்கள் மீது புறத்தோற்றம் செய்யமாட்டார்கள். அவர்களிடம் இருந்து எப்போதும் நேரான எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகளே வெளிப்படும். இதனால் உன்னத ஆளுமையாளர்களுக்கு அருகில் இருப்பவர்களும் மேலான உணர்வை அனுபவிப்பார்கள்.

இவர்கள் மனிதத்துவத்தை நிறைவாக அனுபவிப்பார்கள். உலகம் முழுவதும் பரந்து காணப்படும் அன்பை அவர்களால் உணர்ந்துகொள்ள முடியும். இவர்கள் மகிழ்வு, இன்பம் ஆகியவற்றுடன் மட்டும் தம் வாழ்வைச் சுருக்கிக் கொள்ளாது தம் எதிரான உணர்வுகளையும் புரிந்து செயற்படுவர். ஏனையவர்களின் எதிர்மறையான செயற்பாடுகள் இவர்களை ஒருபோதும் பாதிக்காது. இவ் உன்னத ஆளுமையுடையோர் சரி - பிழை, நல்லது - கெட்டது எனத் தீர்ப்பிடுவதில் காலத்தைச் செலவு செய்யாது ஆக்க ரீதியாக என்ன செய்யலாம் என்பதிலேயே கவனம் செலுத்துவர். தமது குறைகளைத் தொடர்ந்து திருத்திக் கொண்டேயிருப்பர். இது ஏனையவர்களின் குறைகளைத் தீர்க்க முன்னுதாரணமாக அமையும். தமது செயல்களுக்குத் தாமே பொறுப்பேற்றுக் கொள்வர். தமது உள்ளத்தோடும், உடலோடும், உயிர்ப்பான தொடர்பு கொண்டிருப்பதால் தங்களைப் பற்றி யதார்த்தமான இலட்சியவாத விம்பங்களை வைத்திருப்பதில்லை.

உன்னத ஆளுமைப் பண்புடையவர்களின் பண்புகளில் பாரம்பரியக் கூறுகளும் தாக்கம் செலுத்த முடியாது. மற்றவர்களைக் குறை கூறுவதை இவர்

கள் தவிர்த்துக் கொள்வர். தமக்கு ஏற்படுகின்ற துன்பங்களையும், கஸ்ரங் களையும் கூட எப்படிப் பயனுள்ளதாக மாற்றலாம் என்பதில் ஆர்வம் காட்டுவர். மற்றவர்களால் ஏற்படுத்தப்படுகின்ற புண்படுத்தல், உதாசீனம் செய்தல், பயன்படுத்தல் போன்றவைகளில் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். மேலும் இவர்கள் இன்னொருவர் போல ஆக வேண்டும் என்ற விருப்பம் இன்றி தாம் தாமாகவே இருக்க விரும்புவர். இவர் கள் மற்றவர்களின் வளர்ச்சியில் சமூகத் தின் ஆரோக்கியத்திலும் அக்கறை கொண்டவர்களாக இருப்பவர். இவ்வா றான பண்புகள் அனைத்தும் பாடசாலை ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் போது அவர்கள் உளவளத்துணையாளர் என்ற உயர்ந்த வகிபங்கைப் பிரயோகிப்பவ ராகச் செயலாற்ற முடியும். இதற்கான பயிற்சிகளையும் எதிர்காலவியல் நோக்கிய திட்டங்களையும், செயலாற் றுகைகளையும் விரைவாக எமது மண்ணில் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதன்மூலமே கல்விப் பிரச்சினைகள் பலவற்றை நாம் தீர்த்துக் கொள்ள முடியும்.

**"கல்விக்கூடங்களிலும், வாழ்க் கையிலும் ஆற்றப்படும் பணியின் உள்ளார்ந்த நோக்கம் அதன் வழி உளப் பூரிப்படைதலும் ஆனந்தம் அனுபவித் தலும் மட்டுமன்றி அப் பணியின் பேற் றால் சமூகம் அடையும் உன்னத நன் மைகள் பற்றிய அறிவு பெறுதலாகும்."**

**- அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் -**

எமது பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் இடர்பாடுகள் கருத்தூன்றி மனிதத்துவ நோக்கில் கவனிக்கப்பட வேண்டும். மாணவர்க ளின் உடல் - உளப் பிரச்சினைகள் கல்விச் செயற் பாடுகளில் தடைகளையும், பின்னடைவு களையும் ஏற்படுத்தும் அதேவேளை விரும்பத்தகாத செயற்பாடுகளால் மாணவர்களின் கல்வி எதிர்கால வாழ்வு பாதிப்படைகின்றது. எனவே கல்வியை வழங்கும் உயர் சமூக நிறுவனமான பாடசாலைகளில் பணி புரியும் ஆசிரியர் கள் அனைவரும் கல்வி யின் விளை வாக மாணவர்கள் உச்சப் பயனை மகிழ்ச்சியான சூழலில் பெற தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் நவீன வகிபங்குப் பரிமாண உளவளத் துணையாளன் என்ற உன்னத வகிபங்குச் செயன் முறை வழிகாட்டி நிற்கின்றது.

## சேவையில் இருந்து ஓய்வு பெற்றோர்

எமது மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மேலதிக கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி ) திருமதி. பி. செல்வின் இறேனியஸ் அவர்களும் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களாகக் கடமையாற்றிய திரு. வ. ஸ்ரீஸ்கந்தராஜா (வவுனியா வடக்கு வலயம்), திரு. சு. கிருஸ்ணகுமார் (தென்மராட்சி வலயம்), திரு. சி. புஸ்பலிங்கம் (வடமராட்சி வலயம்), திரு.க . முருகவேல் (கிளிநொச்சி வலயம்) ஆகியோர் 2017 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரையான காலத்தில் சேவையில் இருந்து ஓய்வுபெற்று சென்றுள்ளனர். இவர்களின் சிறப்பான சேவைக்காகவும், ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் மாகாணக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வடக்கு மாகாணத்தின் க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் 2017 ஆகஸ்ட்

2017 ஆகஸ்ட் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில்வடக்கு மாகாணத்தில் 11591 பாடசாலைப் பரீட்சார்த்திகள் தோற்றினர். இவர்களில் 68.37 வீதமானோர் சித்திபெற்றுள்ளனர். தேசிய ரீதியில் 66.02 வீதம் சித்தி பெற்றுள்ளனர். இதன் அடிப்படையில் வடக்கு மாகாணம் முதலிடத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது. பாடசாலைப் பரீட்சார்த்திகளில் 7.04 வீதம் ஒரு பாடத்திலேனும் சித்திபெறவில்லை.

தனிப்பட்ட ரீதியில் தோற்றியவர்களையும், பாடசாலைப் பரீட்சார்த்திகளையும் சேர்த்துப் பார்க்கும் போது 13643 பேர் தோற்றியிருந்தனர். அதில் 65.65 வீதம் சித்தி கிடைத்துள்ளது. தேசிய ரீதியில் 64.38 வீதம் சித்தி பெற்றுள்ளனர். இதன் அடிப்படையில் வடக்கு மாகாணம் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது. 7.57 வீதம் ஒரு பாடத்திலேனும் சித்தி பெறாதவர்கள் ஆகும்.

பௌதீக விஞ்ஞானத்தில் வடக்கு மாகாணத்தில் 1575 பாடசாலைப் பரீட்சார்த்திகள் தோற்றி 924 பேர் பல்கலைக் கழகத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். இது 58.67 வீதம் ஆகும். இது தேசிய ரீதியில் முதலிடம் ஆகும் உயிரியல் விஞ்ஞானத்தில் 1686 பேர் தோற்றி 1000 பேர் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். இது 59.31 விகிதமாக அமைகின்றது. வடக்கு மாகாணம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

வர்த்தகப் பிரிவில் 2271 பேர் தோற்றி 1652 பேர் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். இது 75.55 வீதமாகும். இதன் அடிப்படையில் வடக்குமாகாணம் மூன்றாம் இடத்தில் உள்ளது.

கலைப்பிரிவில் 4629 பேர் தோற்றி 3497 பேர் பல்கலைகழகத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர். இது 75.55 வீதமாகும். வடக்கு மாகாணம் இப்பெறுபேற்றில் மூன்றாம் இடத்தில் உள்ளது.

பொறியியல் தொழினுட்பப் பிரிவில் 688 பேர் தோற்றி 403 பேர் தகமை பெற்றனர். இது 58.58 வீதம் சித்தியைப் பெற்றனர். இதன் அடிப்படையில் எமது மாகாணம் நான்காம் இடத்தைப் பிடித்துள்ளது.

உயிர்முறைமைகள் தொழிநுட்பப் பிரிவில் வடக்கு மாகாணத்தில் 616 தோற்றி 403 பேர் சித்தியை எய்தியுள்ளனர். இது 65.42 விகிதமாகும். இதனடிப்படையில் வடக்கு மாகாணம் மூன்றாம் இடத்தில் உள்ளது.

மாவட்ட ரீதியில் பாடசாலைப் பரீட்சார்த்திகளை நோக்கும்போது 25 மாவட்டங்களிலும் மன்னார் மாவட்டம் முதலாவது இடத்திலும், முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாவது இடத்திலும், யாழ்ப்பாண மாவட்டம் ஒன்பதாவது இடத்திலும், வவுனியா மாவட்டம் 16 ஆவது இடத்திலும், கிளிநொச்சி மாவட்டம் 21 ஆவது இடத்திலும் உள்ளன.

மாவட்ட ரீதியில் அனைத்துப் பரீட் சார்த்திகளையும் நோக்கும் போது மன்னார் மாவட்டம் முதலாவது இடம், முல்லைத்தீவு ஐந்தாவது இடம், யாழ்ப்பாணம் 9 ஆவது இடம், வவுனியா 16 ஆவது இடம், கிளிநொச்சி 21 ஆவது இடம்.

## தேசிய ரீதியில் முன்னிலையில் உள்ளோர் மாவட்ட ரீதியாக

**உயிரியல் விஞ்ஞானம்**

யாழ்.மாவட்டம் 2 ஆவது இடம்

**பௌதீக விஞ்ஞானம்**

யாழ். மாவட்டம் 1 ஆவது இடம்

**பௌதீக விஞ்ஞானம்**

மன்னார். மாவட்டம் 9 ஆவது இடம்

**வர்த்தகம்**

முல்லைத்தீவு 04 ஆவது இடம், மன்னார் 05 ஆவது இடம்

**கலை**

மன்னார் 1 ஆம் இடம், முல்லைத்தீவு 4 ஆவது இடம்

**பொறியியல் தொழிநுட்பம்**

வவுனியா 1 ஆவது இடம், யாழ். 03 ஆவது இடம்

**உயிர்முறைமை தொழில்நுட்பம்**

யாழ். 3 ஆவது இடம், மன்னார் 7 ஆவது இடம்

## 2017 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதல் 10 இடங்கள்



சிறிதரன் துவாரகன்
யா/ஹாட்லிக் கல்லூரி
தேசிய மட்டத்தில்
1வது இடம் – கணிதப்பிரிவு



R.D.J. போல் ஜான்சன்
யா/சென்பற்றிக்ஸ் கல்லூரி
தேசிய மட்டத்தில்
3வது இடம் – கணிதப்பிரிவு



**R. நிலக்ஷன்**
யா/இந்துக் கல்லூரி
தேசிய மட்டத்தில் – 8வது இடம்
பொறியியல் தொழினுட்ப பிரிவு



**M. பிரசாத்**
யா/ஹாட்லிக் கல்லூரி
தேசிய மட்டத்தில் – 10வது இடம்
பொறியியல் தொழினுட்ப பிரிவு



**S. கமலேஸ்வரி**
யா/வேம்படி மகளிர் கல்லூரி
தேசிய மட்டத்தில் – 3வது இடம்
உயிரியல் தொழினுட்ப பிரிவு



**R. தர்சிகா**
யா/வேம்படி மகளிர் கல்லூரி
தேசிய மட்டத்தில் – 6வது இடம்
உயிரியல் தொழினுட்ப பிரிவு



**A. புவேஸ்ரியா**
யா/வேம்படி மகளிர் கல்லூரி
தேசிய மட்டத்தில் – 8வது இடம்
உயிரியல் தொழினுட்ப பிரிவு



**A. சரோன்**
ம/முருங்கன் மகா வித்தியாலயம்
தேசிய மட்டத்தில் – 9வது இடம்
உயிரியல் தொழினுட்ப பிரிவு



**M.J.M. இஸ்கான்**
ம/எருக்கலம்பிட்டி ம.ம.வி
தேசிய மட்டத்தில் – 10வது இடம்
உயிரியல் தொழினுட்ப பிரிவு



**M. வக்சலன்**
யா/ இந்துக் கல்லூரி
தேசிய மட்டத்தில் – 9–வது இடம்
உயிரியல் பிரிவு

# வடக்கு மாகாணத்தின் முழுநிலா நாள்

எமது மாகாணக் கல்வித் திணைக்களத்தின் முழுநிலா நாள் விழாவானது 31.01.2018 மன்னாரில் நடைபெற்றது. வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.செ.உதயகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கௌரவ கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், மன்னார் மாவட்ட செயலர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். மன்னார் மறை மாவட்ட ஆயர் அவர்கள் ஆசிச்செய்தி வழங்கிச் சிறப்பித்தார். பல்வேறு பாடசாலைகளின் கலைநிகழ்வுகள் விழாவை அலங்கரித்தன. சிறப்பு நிகழ்வாக முழுநிலா முத்து என்னும் மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந் நிகழ்வின் பதிவுகள் சில









# சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு

வருடா வருடம் கல்வித் திணைக்களத்தின் முகாமைத்துவப் பிரிவினால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்படும் இந்நிகழ்வானது 28, 29.10.2017 ஆகிய தினங்களில் யா/இந்து மகளிர் கல்லூரியில் நான்கு அமர்வுகளாக இடம்பெற்றது. மாகாணக் கல்விப் பணிப்பாளர். திரு.செ.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்,

- முதலாம் நாள் முதலாம் அமர்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கௌரவ கலாநிதி. திரு.க. சர்வேஸ்வரன் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.
- முதலாம் நாள் இரண்டாம் அமர்விலும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கௌரவ கலாநிதி. திரு.க.சர்வேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.
- இரண்டாம் நாள் முதலாம் அமர்வில் மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திரு. ஏ. சி.மோகன்ராஸ் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.
- இரண்டாம் நாள் இரண்டாம் அமர்வில் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் திரு.இ.விக்னேஸ்வரன் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் மாகாண மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாகாணமட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களும், நல்லாசிரியருக்கான சனாதிபதி விருதாகிய பிரதீபாபிரபா விருது பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100ற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை 75 வீதமாகக் கொண்ட பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் பாராட்டப்பட்டு பரிசில்களும், நினைவுப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அந்த வகையில்

28.10.2017 அமர்வு ஒன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகியது. அதில் ஆரம்பக்கல்வி, அழகியல், விசேட கல்வி பாடங்களில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

28.10.2017 மதியம் 2.00 மணிக்கு அமர்வு இரண்டு ஆரம்பமானது. அதில் அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

- நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களுக்கானது.
- ஆரம்பக்கல்வி ஆசிரியர் - தரம் 5 புலமைப் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் மாணவர்களைப் பெறவைத்த ஆசிரியர்களும், பாடசாலைகளுக்குமானது. மொத்தமாக 500 அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

29.10.2017 அன்று இரண்டாம் நாள் காலை அமர்வு 9.00 மணிக்கு ஆரம்ப மானது. அதில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், வர்த்தகம், மனைப்பொருளியல் பாடங் களில் சாதனை படைத்த மொத்தமாக 547 மாணவர்கள் கௌரவிக்கப்பட் டனர்.

29.10.2017 அன்று மதியம் 2.00 மணிக்கு இரண்டாம் அமர்வு ஆரம்ப மானது.

ஆங்கில தினப் போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்கள். மொத் தமாக 685 மாணவர்கள் கௌரவிக்கப் பட்டனர். மொத்தமாக 725 மாணவர்கள் கௌரவிக்கப்பட் டனர்.

போட்டிகளில் பங்குபற்றிய மாணவர் களுக்கான பரிசில்களும், பதக்கங் களும் வழங்கப்பட்டதுடன் ஆசிரியர், அதிபர்களுக்கான கௌரவங்களும் வழங்கப்பட்டன.










## புதிய இலங்கைக் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் நியமனம்

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளின் மூலம் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய பயிற்சியை முடித்த பின்னர் வடமாகாணத்திற்கு 59 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 20 பேர் பொதுஆளணியையும், 39 பேர் விசேட ஆளணியையும் சேர்ந்தவர்களாவர். இவற்றைவிட சேவை மூப்பின் அடிப்படையில் அதிபர் சேவையில் இருந்த இருவர் கல்வி நிர்வாகச் சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இந்நியமனங்கள் வடக்கு மாகாணத்தினது கல்விச் செயற்பாடுகளுக்கு பெரும் உந்துசக்தியாக அமையும் என்பது நிச்சயமாகும். இவர்கள் அனைவரையும் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் வாழ்த்தி வரவேற்கின்றது.

# பட்டதாரி ஆசிரியர்களுக்கான திசைகோட்படுத்தல் பயிற்சி - 2017

2017 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களில் புவியியல், குடியியல், வரலாறு, வழிகாட்டலும், ஆலோசனையும் ஆகிய பாடத்துறை சார்ந்த 300 ஆசிரியர்களுக்கான, 21 நாட்களைக் கொண்ட முன்சேவைப் பயிற்சி 04.12.2017 தொடக்கம் 24.12.2017 வரை வட்டுக்கோட்டை தொழிநுட்பக் கல்லூரியில் இடம் பெற்றது.

இப்பயிற்சிநெறி தினமும் காலை உடற்பயிற்சிச் செயற்பாடுகளுடன் ஆரம்பமாகியது. இதில் பாடசாலை களில் நடைமுறைப்படுத்தப்படும் உடற் பயிற்சிக்குரிய பயிற்சிகளும் இலகு விளையாட்டுப் பயிற்சிகளும் ஆசிரியர் களுக்கு வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து காலை 08.30 மணிக்கு விரிவுரைகள் ஆரம்பமாகி, ஆசிரியர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, குழு நிலையில் கலந்துரையாடல்கள், செய்முறைப் பயிற்சிகள் இடம்பெற்றன. கற்றல், கற்பித்தல் நுட்பங்கள், வகுப்பறை முகாமைத்துவம், மாணவர் உளவியல், கல்வி வரலாறு எனப் பல விடயங்களில் ஆசிரியர்கள் பயிற்றுவிக் கப்பட்டனர். தினமும் மாலை 7.00 மணி முதல் 09.00 மணி வரை அழகியல் பயிற்சிகள் வழங்கப்பட்டன. சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம், அழகியல் ஆகிய அழகியல் துறைகளுக்குரிய இலகு பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

வளவாளர்களாக பல்வேறு நிறுவ னங்களின் தலைவர்கள், மதகுருமார், சிரேஸ்ட கல்வியியளாளர்கள், மூத்த ஆசிரியர்கள், திட்டமிடல் பணிப்பாளர் கள், வைத்திய கலாநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பான வகையில் பயிற்சிகளை வழங்கினர்.





# வவுனியாவில் நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான திசைகோட்படுத்தல் - 2017

இந் நிகழ்வானது தமிழ் மாணவர்களுக்கு வவுனியா காமினி மகா வித்தியாலயத்திலும், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் நடைபெற்றது.
சிங்கள மாணவர்களுக்கான பயிற்சி வவுனியாவில் அமைந்துள்ள Pitec நிறுவனத்திலும் நடாத்தப்பட்டது.











# கணித வினாடிவினாப் போட்டி – 2017

கணித வினாடி வினாப் போட்டி யானது, வருடா வருடம் நடாத்தப்பட்டு வருகிறது. இப்போட்டிக்கான மாணவர் தெரிவானது பாடசாலை மட்டத்திலேயே ஆரம்பமாகிறது. கனிஷ்ட பிரிவு போட்டி தரம் 6, 7, 8 மாணவர்களுக்கானது. ஒவ்வொரு தரத்திலிருந்தும் மூன்று மாண வர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இருவர் போட்டியாளர்களாகவும் ஒருவர் மேலதிக ஆளணியாகவும் இருப்பார். ஒன்பது பேர் கொண்ட இவ் அணி ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு கோட்டமட்டப் போட்டியில் பங்கெடுப்பார்கள். பின் ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் முதல் புள்ளிகளைப் பெற்ற தலா மூவர் கொண்ட வெவ்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களைக் கொண்ட அணிகள் தெரிவு செய்யப்பட்டு வலய மட்டப் போட்டியில் பங்கெடுப்பார்கள். பின் ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் முதல் புள்ளிகளைப் பெற்ற தலா மூவர் கொண்ட வெவ்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களைக் கொண்ட அணிகள் தெரிவு செய்யப்பட்டு வலய மட்டப் போட்டிகளில் பங்கெடுப்பார்கள். இப் போட்டியிலிருந்து வலய மட்ட அணி தெரிவு செய்யப்படும். இவ்வாறு பன்னிரண்டு வலயங்களிலும் தெரிவு செய்யப்பட்ட அணிகள் மாகாண மட்ட போட்டிகளில் பங்கெடுப்பார்கள்.

இவ்வாறு மாகாணப் போட்டியில் மூன்று அணியினர் தெரிவு செய்யப்படு வார்கள். இவ்வருடம் கனிஷ்ட பிரிவில் கிளிநொச்சி வலயம் முதல் இடத்தை யும் யாழ் வலயம் இரண்டாம் இடத்தை யும், தென்மராட்சி வலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். தேசிய மட்டப் போட்டிக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்று வடக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

1. சிரேஸ்ட பிரிவு I போட்டி தரம் 9, 10 மாணவர்களுக்கானது. மேற்படி போட்டி போன்றே இப்போட்டியும் நடாத்தப்படும். இதில் ஒவ்வொரு தரத்திலிருந்தும் நான்கு மாணவர் கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களில் மூவர் போட்டியாளர்க ளாகவும் ஒருவர் மேலதிக ஆளணி யாகவும் இருப்பார்.

   மாகாண மட்டப் போட்டிகளில் யாழ் வலயம் முதலாம் இடத்தையும் வலிகாமம் வலயம் இரண்டாம் இடத்தை யும் வடமராட்சி வலயம் இரண்டாம் இடத்தையும், வடமராட்சி வலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண் டார்கள். தேசிய மட்டப் போட்டிக்காக தெரிவுசெய்யப்பட்ட அணியினர் தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொண்டு முதல் இடத்தைப்பெற்று வடக்கு மாகா ணத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

2. இவ்வருடம் முதன் முதலாக சிரேஷ்ட பிரிவு II போட்டிகள் தரம் 12 மாணவர்களுக்கு நடாத்தப்பட்டது. மாகாண மட்டத்தில் இப்போட்டி யானது பரீட்சையாக மாத்திரமே இம்முறை நடாத்தப்பட்டது. இதனால் வலயங்களுக்குரிய நிலை கள் கிடைக்கப் பெறவில்லை. தேசிய மட்டப் போட்டிக்கான அணி யினர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொண்டு முதல் இடத்தைப் பெற்று வடக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

## சிரேஷ்ட பிரிவு - I

| | | | |
|---|---|---|---|
| 01. | K.கம்சாயினி | யா/அருனோதயக் கல்லூரி | தரம் - 9 |
| 02. | V.விதுவர்ஷன் | யா/தமிழ் மத்திய ம.வி | தரம் - 9 |
| 03. | G.சாம்பவி | யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி | தரம் - 9 |
| 04. | M.லட்சிகன் | யா/அருனோதயக் கல்லூரி | தரம் - 9 |
| 05. | N.சிவமைந்தன் | யா/ இந்துக் கல்லூரி | தரம் - 10 |
| 06. | R.றஜிந்தன் | யா/ஹாட்லி கல்லூரி | தரம் - 10 |
| 07. | J.வருணன் | கிளி/கிளிநொச்சி ம.வி | தரம் - 10 |
| 08. | B.அபிராம் | யா/ இந்துக் கல்லூரி | தரம் - 10 |

## சிரேஷ்ட பிரிவு - II

| | | | |
|---|---|---|---|
| 01. | A.கஸ்ரன் டிறோன் | யா/புனித பத்திரிசியார் கல்லூரி | தரம் - 12 |
| 02. | M.பரத்றாஜ் | யா/இந்துக் கல்லூரி | தரம் - 12 |
| 03. | S.தர்சா | யா/இறம்பைக்குளம் ம.வி | தரம் - 12 |
| 04. | B.யதுநந்தனசர்மா | யா/இந்துக் கல்லூரி | தரம் - 12 |
| 05. | K.வாகீசன் | யா/விபுலானந்தா இந்துக்கல்லூரி | தரம் - 12 |
| 06. | R.நிலவன் | யா/ஹாட்லி கல்லூரி | தரம் - 12 |
| 07. | R.ஸ்ரெலின் டினோசன் | யா/இந்துக் கல்லூரி | தரம் - 12 |
| 08. | A.கேசவி | யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | தரம் - 12 |

இவ்வருடம் தேசிய மட்ட கணித வினாடிவினாப் போட்டியில் மூன்று அணியினரும் முதல் இடங்களைப் பெற்றுக்கொண்டமை சிறப்பானதாக அமைகிறது. தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மாகாண மட்டத்தில் பல பயிற்சிகள் நடாத்தப்பட்டன. இப்பயிற்சிகளில் மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்கள் அர்ப்பணிப்புகளுடன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலதிகமாக போட்டிக்கு கொழும்பிற்கு சென்ற வேளை மாணவர்களுடன் வருகை தந்து ஒவ்வொரு சுற்று நிறைவடைந்ததும் மாணவர் விட்ட தவறுகளை சுட்டிக்காட்டி விளக்கமளித்து அவர்களை அடுத்த சுற்றுக்கு தயார்ப்படுத்திய எமது வளவாளர்கள் பாராட்டுக்குரியவர்களாவர்.

**திருமதி. சு. கி. வொலன்ரைன்**
**உதவிக்கல்விப் பணிப்பாளர் (கணிதம்)**
**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்.**



கனிஷ்ட பிரிவு



சிரேஷ்ட பிரிவு - 1



சிரேஷ்ட பிரிவு - 2

# பாடசாலைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், இணைபாடவிதானச் செயற்பாடுகள் முகாமை செய்தல் தொடர்பாக மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளில் சில.....

பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முகாமை செய்தல் தொடர்பாகப் பின்வரும் விடயங்களில் அதிக கவனத்தினைச் செலுத்தி மாகாண, வலய, கோட்ட, பாடசாலை மட்டச் செயற்பாடுகளை வினைத்திற னாகவும், விளைதிறன் மிக்கதாகவும் மாற்ற மாகாணக் கல்வித் திணைக்கள மானது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அவற்றுள்..

### 01. வகுப்பறைப் பதிவேடு :

பாடசாலைகளில் நடைபெறுகின்ற வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற் பாடுகளை பதிவு செய்வதற்காக மத்திய கல்வி அமைச்சினால் வகுப்பறைப் பதி வேடு தயாரிக்கப்பட்டு பாவனையில் இருந்து வருகின்றது. இவ் வகுப்பறைப் பதிவேட்டில் உரிய அனைத்து விடயங் களும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின் றது. ஒவ்வொரு பாடவேளையின் போதும் உரிய ஆசிரியர்களினால் இது பூரணப்படுத்தப்படல் அவசியமானதா கும். வார இறுதியில் உரிய பதிவுகள் வகுப்பாசிரியரினால் மேற்கொள்ளப் பட்டு பாடசாலையின் பகுதித் தலைவர், பிரதி அதிபர் அல்லது அதிபர் (அதிபரி னால் பொறுப்பளிக்கப்பட்ட பிரதி அதிபர் உரிய வகையில் பூரணப்படுத் தப்படல் வேண்டும். நடைபெறாத பாட சாலை நேர வகுப்புக்கள் நடத்தப்படும் போது பதிவு செய்வதற்குரிய இடத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். இவ்வா றான பதிவுகளின் அடிப்படையில் குறி த்த தவணையில் நடைபெற வேண்டிய வகுப்புக்கள் - நடைபெற்ற வகுப்புக்கள் கணிப்பிடப்பட்டு, அதனடிப்படையில் வகுப்புக்கள் நடத்தப்படுதல் அவசிய மானதாகும். வகுப்பறைக் கற்றல் - கற்பி த்தல் செயற்பாடுகள் மதிப்பீடு செய்யப் படும் போது (உள்ளக, வெளியக) உரிய மதிப்பிட்டாளரினால் உரிய பக்கத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படுதல் கட்டா யமானதாகும்.

### 02. ஆசிரியர் அறிக்கைப் புத்தகம் :

ஆசிரியர் அறிக்கைப் புத்தகமானது ஆசிரியரைச் சுயமதிப்பீட்டிற்கு உள்ளா க்குதல், ஆசிரியர் மதிப்பீடுகளின் போது (செயலாற்றுகை, பாராட்டு, கௌரவிப்பு, நேர்முகப்பரீட்சை) கவனத் தில் கொள்ளல், பாடசாலை முகாமைத் துவத்தை எளிதாக்குதல், வெளிவாரி, உள்வாரி மதிப்பீடுகளின் போது தகவல் களைப் பெற்றுக்கொள்ளல். ஆசிரியர் களின் தனிப்பட்ட ஆற்றல்களையும் செயற்திறனையும் ஆவணப்படுத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையா கக் கொண்டு மத்திய கல்வி அமைச்சி னால் வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாகச் சகல பாடசாலை ஆசிரியர் களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கைப் புத்தகமானது ஆசிரியரின் சுயவிபரம், சேவை தொடர்பான விபரம், வருடாந்த ஆசிரியர் மதிப்பீட்டு அறிக்கை, கோட்ட, வலய, மாகாண, கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்க

ளின் விசேட குறிப்புக்கள் ஆகிய நான்கு படிவங்களைக் கொண்டுள்ளது. இப் பதிவுப் புத்தகமானது தேவையான எந்தச் சந்தர்ப்பத்திலும் (உள்வாரி, வெளிவாரி மதிப்பீட்டுச் சந்தர்ப்பங்கள் உள்ளடங்கலாக) வழங்கக் கூடியவாறு ஆசிரியர் தமது பொறுப்பில் வைத்திருத்தல் அவசியமானது. மாதிரிப் படிவ இலக்கம் - 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள "ஆசிரியர் பற்றிய அதிபரினது பொதுவான கணிப்பீடு" ஒவ்வொரு வருடத்திலும் பதிவு செய்தல் கட்டாயமானதாகும். இனி வரும் காலங்களில் சகல நேர்முகப் பரீட்சைகளின் போதும் ஆசிரியர் அறிக்கைப் புத்தகம் மிக முக்கியமான ஆவணமாகக் கருதப்படும் வெளிவாரி மதிப்பீட்டில் ஈடுபடும் சகல உத்தியோகத்தர்களும் வகுப்பறை மதிப்பீட்டின் போது தங்கள் பதிவுகளை இப் பதிவுப் புத்தகத்தில் இடுதல் வேண்டும்.

### 03. அதிபர் அறிக்கைப் புத்தகம் :

அதிபர் அறிக்கைப் புத்தகமானது அதிபரைச் சுயமதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல், மதிப்பீடுகளின் போது (செயலாற்றுகை, பாராட்டு, கௌரவிப்பு, நேர்முகப் பரீட்சை) பயன்படுத்தல், பாடசாலை முகாமைத்துவத்தை முறையான திசை முகப்படுத்தலுக்கு வழிகாட்டல், பாடசாலை முகாமையாளர்களின் வகிபங்கு, வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, திறன்கள் என்பவற்றை அறிக்கையிடுதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மத்திய கல்வி அமைச்சினால் வலயக்கல்வி அலுவலகங்கள் ஊடாகச் சகல பாடசாலை அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கைப் புத்தகமானது தனிப்பட்ட தகவல்கள், சேவை அறிக்கை, வருடாந்த ஆசிரியர் மதிப்பீட்டு அறிக்கை, வருடாந்த அறிக்கை, கோட்ட, வலய, மாகாண, கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களின் விசேட குறிப்புக்கள் ஆகிய நான்கு படிவங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வருட இறுதியிலும் சகல மதிப்பீடுகளையும் உரிய தலைவர்கள மூலம் உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். மாதிரிப் படிவ இலக்கம் - 03 இனைப் பூரணப் படுத்தல் தொடர்பாக கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.

### 04. பாடசாலை உள்ளக மதிப்பீடு :

"எமது பாடசாலை எந்தளவிற்குத் தரமானது" என்ற மதிப்பீட்டு வழிகாட்டி நூலிற்கு அமைய பாடசாலையில் உள்ளக மதிப்பீட்டுச் செயற்பாடுகள் நடைபெற்றிருத்தல் அவசியமானது. எட்டுத் துறைகளுக்கும் உரிய பொறுப்புக்கள் பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு, உரிய ஆவணங்கள் தொகுக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் உரிய படிவங்கள் மூலம் புள்ளிகள் வழங்கப்பட்டு, பாடசாலையின் கல்விப் பண்புத் தரச் சுட்டி கணிக்கப்படல் வேண்டும். இப் புள்ளிகளின் அடிப்படையில் பாடசாலையில் மேம்படுத்தப்பட வேண்டிய துறைகள் இனங்காணப்பட்டு அவற்றினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 05. மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகள் அவதானிப்பு :

பாடசாலையில் மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகள் தர, பாட ஆசிரியர்களினால் திருத்தப்படுதல் அவசியமானது. தர இணைப்பாளர்கள், பாட

இணைப்பாளர்கள், பகுதித் தலைவர்கள், உதவி, பிரதி அதிபர்கள், அதிபர் ஆகியோரினால் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இச் செயற்பாடுகள் முகாமை செய்யப்படுதல் வேண்டும். முகாமை செய்யப்பட்ட மையினை அவதானிக்கக் கூடிய வகையில் கொப்பிகளில் அல்லது அறிக்கைகளில் குறிப்புக்கள் அவசிய மானது.

**06. ஆசிரிய ஆலோசகர்களின் பாடசாலைத் தரிசிப்புக்கள்**

ஆசிரிய ஆலோசகர்களது பாடசாலைத் தரிசிப்பின் போது அவர்கள் தரிசிப்பினைப் பதிவு செய்கின்ற வகையில் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட படிவத்தினை ஆசிரிய ஆலோசகர்கள் பூரணப்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலும் ஆசிரிய ஆலோசகர்கள் வகுப்பறைத் தரிசிப்பின் போது ஆசிரியர் அறிக்கைப் புத்தகம், பாடப்பதிவுப் புத்தகம் ஆகியவற்றில் உரிய குறிப்புக்கள் இடுதல் கட்டாயமானதாகும். மேலும் ஆசிரியர்களுக்கு வேண்டிய வழிகாட்டல், ஆலோசனைகள் வழங்கும் போது அவை குறித்து விரிவாக அறிக்கையிடுதல் வேண்டும்.

இந்த வகையில் மேற்குறித்த செயற்பாடுகளுக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பதனூடாக வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையினை மேம்படுத்த உதவுவோமாக.

## தேசியமட்ட குத்துச் சண்டையில் வடக்குக்கு எட்டுப் பதக்கங்கள்

2017 செப்ரெம்பர் மாதம் இலங்கை பாடசாலைகள் குத்துச்சண்டைச் சங்கம் நடத்திய தேசிய மட்டத் தொடரில் வடக்கு மாகாணத்துக்கு 5 தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம், 2 வெண்கலப் பதக்கம் என்று மொத்தமாக எட்டுப் பதக்கங்கள் கிடைத்துள்ளன. முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியைச் சேர்ந்த சாம்சன் 37 - 40 கிலோ எடைப் பிரிவில் தங்கப்பதக்கதத்தையும், தனுசன் 50 - 56 கிலோ எடைப்பிரிவில் (17 - 18 வயதுப் பிரிவு) தங்கப் பதக்கத்தையும், கிரிதரன் 60 - 64 கிலோ எடைப்பிரிவில் (17 - 18 வயதுப்பிரிவு தங்கப் பதக்கத்தையும், ஜெனனன் 56 - 60 கிலோ எடைப்பட்ட பிரிவில் (17 - 18 வயதுப்பிரிவு) தங்கப்பதக்கத்தையும் வென்றனர்.

முத்தையன்கட்டுஇடதுகரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த தமிழரசன் 37 - 40 கிலோ எடைப் பிரிவில் (15 - 16 வயதுப்பிரிவு) தங்கப்பதக்கத்தையும், முத்தையன் கட்டு வலதுகரை அரசினர் பாடசாலையைச் சேர்ந்த றூபன் 46 - 50 கிலோ எடைப்பிரிவில் (15 - 16 வயதுப்பிரிவு) வெள்ளிப் பதக்கத்தையும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த மதிவாணன் 52 - 56 கிலோ எடைப் பிரிவில் (19 வயது பிரிவு) வெண்கலப் பதக்கத்தையும், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரதீபன் 39 - 40 கிலோ எடைப் பிரிவில் (13 - 14 வயதுப்பிரிவு) வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.


# எமது வெளியீடுகள்












# நிகழ்வுகளின் பதிவுகள்



















மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

எவகிறீன் அச்சகம். யாழ்ப்பாணம். 021 221 9893